# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1990/48 - 2016 ඔක්තෝබර් මස 29 වැනි සෙනසුරාදා - 2016.10.29

*1990/48 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 29 ஆந் திகதி சனிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

**மத்திய மாகாண மாகாண சபை**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தில் எட்டாவது அனுபந்தத்தின் படி மத்திய மாகாண சபைக்கு கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் மூலம் பிறப்பிக்கப்பட்டுள்ள 1992 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க பயணிகள் போக்குவரத்து செய்வதற்கான நியதிச்சட்டத்தின் 24 (2) (1) (xii) மற்றும் 24 (3) மற்றும் மத்திய மாகாணத்தின் 2000 ஆண்டின் 01 ஆம் இலக்க பயணிகள் போக்குவரத்து சேவை அதிகார சபை நியதிச்சட்டத்தின் 20 ஆவது பந்தியின் கீழ் பிறப்பிக்கப்பட்ட கட்டளை.

1992 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, பயணிகள் போக்குவரத்து செய்யும் நியதிச்சட்டத்தின் 24 (2) (1) (xii), (xiii) பந்தியிலும் மத்திய மாகாணத்தின் 2000 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பயணிகள் போக்குவரத்து அதிகார சபை நியதிச்சட்டத்தின் 20 ஆவது பந்தியில் மத்திய மாகாண வீதி அபிவிருத்தி, போக்குவரத்து, மின்சக்தி, எரிபொருள் சக்தி மற்றும் வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் எதிரிவீர வீரவர்தன ஆகிய எனக்கு கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி 2016.10.27 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1990/27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரத்தில் வெளியிடப்பட்ட மத்திய மாகாண பயணிகள் போக்குவரத்து சேவை அதிகாரச சபையின் சஹசர எனும் பெயரில் புதிய போக்கவரத்து நடைமுறை சம்பந்தமாக பிறப்பிக்கப்பட்ட கட்டளைகளுக்கு மேலதிகமாக கீழே குறிப்பிடப்படும் கட்டளைகள் பிறப்பிக்கப்படுவதுடன், அவை இந்த வர்த்தமானப் பத்திரம் வெளியிடப்படும் தினத்திலிருந்து அமுல்படுத்த வேண்டும் என்பதை இத்தால் கட்டளையிடுகிறேன்.

(1) (i) அமைச்சரின் கட்டளையில் குறிப்பிடப்பட்ட தினத்தில் இருந்து 12 மாத காலத்திற்குள் மத்திய மாகாண போக்குவரத்து சேவை அதிகார சபை மூலம் மாகாணத்திற்குள் பஸ்வண்டி ஓட்டப்பாதையொன்றை அல்லது சிலவற்றை ஒன்று சேர்ப்பதன் மூலம் ஓட்டப் பகுதியினை அறிந்து கொண்டு வெளியிடப்படவேண்டும் என்பதுடன்,

(ii) வெளியிடப்பட்ட ஓட்டப் பகுதி புதிய முறைமைக்கு அமைவாக பரிபாலனம் செய்வதற்கான முகாமையாளர் ஒருவரை சேவையில் அமர்த்த வேண்டும் என்பதுடன்,

(iii) வெளியிடப்பட்ட ஓட்டப் பகுதி ஒன்று அல்லது சிலவற்றிற்காக செயற்பாட்டு கட்டுபாட்டுப் பிரிவு ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்பதுடன்,

(2) (i) மத்திய மாகாண பயணிகள் போக்குவரத்து சேவை அதிகார சபை மூலம் ஓட்டப் பகுதி வெளியிடப்பட்ட தினத்திலிருந்து அல்லது அதிகார சபை மூலம் விசேடமாக குறிப்பிடப்படும் கால எல்லைக்குள் ஒரு பாதை அல்லது சில பாதைகளின் அனுமதிப்பத்திரம் பெற்று இருப்பவர்கள், அந்த பகுதிக்காக பயணிகள் போக்குவரத்து சேவை அதிகார சபை மூலம் நியமிக்கப்பட்ட முகாமையாளரின் பரிபாலனத்தின் கீழ் அனுமதிப்பத்திரத்தில் அனுமதிக்கப்பட்ட ஒரு பாதை அல்லது பாதைகளில் பயணிகள் போக்குவரத்து சேவை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதுடன் முகாமையாளர் மூலம் இடைக்கிடையே தரப்படும் நேர அட்டவணையை மற்றும் அறிவுரையை பின்பற்றுவதற்கும், சேவை தரத்திற்கேற்ப பஸ்வண்டி ஓட்டத்தை மேற்கொள்ள வேண்டும் என்பதுடன்,

(ii) அனுமதிப்பத்திரம் பெற்று இருப்பவர்களின் மூலம் பயணிகள் போக்குவரத்துக்கு சிறந்த ஓட்ட தகுதியில் இருக்கும் பஸ்வண்டிக்கு ஜீ. பி. எஸ் (GPS) கருவி பொருத்தப்பட்டு பயன்படுத்துவதற்கும், சீ. சீ. டீ. வீ. (CCTV) கெமரா கருவி பொருத்தப்பட்டு பயன்படுத்துவதற்கும், முற்கொடுப்பனவு அட்டை மாத்திரம் பயன்படுத்தி அனுமதி சீட்டு வழங்க கூடிய ஜீ. பி. ஆர். எஸ் (GPRS) தொழில்நுட்பத்துடன் கூடிய இலத்திரனியல் அனுமதி சீட்டு இயந்திரம் ஒன்றினை பஸ்வண்டியினுள் பயன்படுத்துவதற்கும்,

(iii) தினந்தோரும் உழைக்கும் அனைத்து வருமானம் மத்திய மாகாண பயணிகள் போக்குவரத்து சேவை அதிகார சபையின் பெயரில் அரச வங்கியொன்றில் இதற்காக நடைமுறைப்படுத்தப்படும் வைப்பு கணக்கில் வைப்பிலிட்டு அந்த வருமானத்தில் முற்கொடுப்பனவு அட்டைக்கான தொழில்நுட்ப சேவை கட்டணம் தவிர அனைத்து மிகுதிப் பணம் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்படும் பஸ்வண்டிகளுக்காக ஒரு பஸ்வண்டிக்கு அந்த தினத்தின் ஓட்டத்திற்கான செலவு விகிதம் மூலம் பஸ்வண்டி உரிமையாளர்களுக்கு சாதாரணமாக அன்றாடம் பிரித்து கொடுப்பதற்கும்,

(3) மேற்கூறப்பட்ட 1 ஆவது கட்டளையின் கீழ் பிறப்பிக்கப்பட்ட கட்டளை உடனடியாக நடைமுறைப்படுத்தும் வகையில் இந்த வர்த்தமானி பத்திரம் வெளியிட்ட தினத்தில் இருந்து மத்திய மாகாணத்தில் அனைத்து பாதைகளுக்கும் செல்லுபடியாகும் என்பதுடன்,

(4) பயணிகள் போக்குவரத்து பஸ்வண்டி சேவை மேலும் அபிவிருத்தி செய்வதற்கான பயணிகள் போக்குவரத்து அதிகார சபைக்கு கருத்து மற்றும் யோசனை முன்வைப்பதற்காக 8 உறுப்பினர்களுக்கு மேற்படாத எண்ணிக்கையை அறிவித்து ஒரு பகுதி அல்லது சில பகுதிக்காக முகாமைத்துவ அறிவுரைக் குழு அமைக்கப்படுவதற்கும், அந்த குழு மூலம் பஸ்வண்டிகளின் வருமானத்தை அதிகரித்தல், வருமானத்தை பிரித்தல், ஊழியர்களின் சம்பளம் மற்றும் அவர்களின் சமூக பாதுகாப்பு முறைமை மற்றும் பஸ்வண்டி பராமரிப்பு செய்வது சம்பந்தமான அறிவுறுத்தல் சேவை வழங்குவதற்கும்,

(5) சேவை தகுதி கட்டுபாடு மற்றும் பயணிகளின் வசதிகள் பற்றிய அனைத்து அதிகாரம் மற்றும் புதிய சேவையினை அறிமுகப்படுத்தல் சம்பந்தமான அனைத்து தீர்மானம் மத்திய மாகாண பயணிகள் போக்குவரத்து சேவை அதிகார சபைக்கு உரியது என்பதுடன்,

(6) (i) தொழில்நுட்பம் மற்றும் கணக்கு தணிக்கைக்காக தகுதி பெற்ற தணிக்கையாளர்கள் அறிவிக்கப்பட்டு ஓட்டப் பகுதியினை தணிக்கை செய்வதற்காக மத்திய மாகாண பயணிகள் போக்குவரத்து சேவை அதிகார சபை மூலம் நியமிக்கப்படல் வேண்டும்.

(ii) அந்த தணிக்கை அறிக்கை அந்தந்த பாதை அல்லது ஓட்டப் பகுதிக்கான அனுமதிப்பத்திரம் பெற்று இருப்பவர்களுக்கு தேவை ஏற்படுமிடத்து பரிசோதனை செய்து பார்ப்பதற்காக திறந்து வைத்தல் அல்லது தேவையான விடயங்களை அமைத்து கொடுத்தல் மத்திய மாகாண பயணிகள் போக்குவரத்து சேவை அதிகார சபை மூலம் செய்யப்படல் வேண்டும்.

(iii) மேலும் அந்த தணிக்கை வருடாந்த தணிக்கை அறிக்கையை விடய பொறுப்பு அமைச்சர் மூலம் மாகாண சபைக்கு முன்வைக்கப்படல் வேண்டும்.

எதிரிவீர வீரவர்தன,
மத்திய மாகாண வீதி அபிவிருத்தி,
போக்குவரத்து, மின்சக்தி, எரிபொருள் சக்தி
மற்றும் வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர்.

மத்திய மாகாண சபையின் அபிவிருத்தி, போக்குவரத்து, மின்சக்தி,
எரிபொருள் சக்தி மற்றும் வீடமைப்பு நிர்மாணத்துறை
அமைச்சர்.அலுவலகம்,
கண்டி,
2016, ஒற்றோபர் 28.

11-683

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.